# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| | | |
|---|---|---|
| **தரம் : 11** | **பாடம் : சைவநெறி I, II** | **நேரம் : 3.00 மணித்தியாலம்** |

**பெயர் / சுட்டெண்** :.......................................................................................................

### பகுதி I

❖ **மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

01) பெருங்கதை விரதத்தின் கடவுளாக விளங்குபவர்.
(01) சிவன் (02) விநாயகர் (03) விஸ்ணு (04) வைரவர்

02) ஞானியர்கள் தாம் கண்டுணர்ந்த உண்மைகளை கூறுவது.
(01) ஆப்த வாக்கியம் (02) வேதம்
(03) அறுமானம் (04) பிரத்தியட்சம்

03) வேள்வி, மந்திரம, கிரியை என்பவற்றுக்கு முக்கியம் கொடுப்பது.
(01) இருக்கு வேதம் (02) யசுர் வேதம் (03) சாம வேதம் (04) அதர்வண வேதம்

04) திருக்கூட்டச் சிறப்பு இடம்பெறும் நூல்.
(01) கந்தபுராணம் (02) பெரியபுராணம்
(03) திருதொண்டத்தொகை (04) திருவாசகம்

05) "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பதன் மூலம் சிறப்பிக்கப்படும் தாளம்.
(01) கோதாளம் (02) வஸ்திரதானம் (03) வித்தியாதானம் (04) அன்னதானம்

06) மிக உயரமான கொடித்தம்பம் அமைந்துள்ள ஆலயம்.
(01) ஈழத்து சிதம்பரம் (02) நல்லூர்
(03) கொக்கட்டிச்சோலை (04) பொன்னம்பலவாணேச்சரம்

07) "இராவணன் மேலது நீறு" என பாடிய நாயனார்.
(01) தருமசேனர் (02) வாதவூரர் (03) பாலறாவாயர் (04) வன்தொண்டர்

08) இராசிச்சக்கரத்தில் இறுதியாக அமையும் இராசி.
(01) கடகம் (02) மீனம் (03) துலாம் (04) கன்னி

09) திருநாவுக்கரகர் சரியைநெறி நிற்க வழிகாட்டியாக அமைநதவர்.
(01) திலகவதியார் (02) மங்கையக்கரசி (03) புகழனார் (04) மாதினியார்

10) ஆன்மாக்களின் மலமாசை போக்குவதால் விழதிக்கு வழங்கப்படும் பெயர்.
(01) பசிதம் (02) இரட்சை (03) பஸ்மம் (04) திருநீறு

11) இறைவனின் சோதிப்பிளம்பு தோன்றிய, ஒடுங்கிய தினம் முறையே.
(01) சிவராத்திரி பிரதோசம் (02) திருக்கார்த்திகை, சிவராத்திரி
(03) பிரதோசம் திருக்கார்த்திகை (04) சிவராத்திரி, திருக்கார்த்திகை

12) சம்பந்தர் பூம்பாவையை உயிர்பிக்க பாடிய பதிகம்.
(01) சதுரம் மறை...... (02) மட்டிட்ட புன்னை......
(03) துணிவளர் திங்கள்...... (04) சடையாயெனுமால்......

13) புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய கருவறைக்கதவு திறக்கப்படும் மாதம்.
(01) வைகாசி (02) புரட்டாதி (03) ஆனி (04) ஆடி

14) ஒப்புரவு ஒழுகு, ஈவது விலக்கேல் என கூறியவர்.
(01) திருவள்ளுவர் (02) திருமூலர் (03) ஔவையார் (04) தாயுமானவர்

15) தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம்.
(01) திருமறைக்காடு (02) சிதம்பரம் (03) திருமழபாடி (04) திருவாருர்

16) நால் வேதங்களும் கொண்டமைந்த உடபிரிவுகள்.
(01) சரியை கிரியை யோகம் ஞானம்
(02) கர்ம காண்டம், ஞானகாண்டம், உபாசனை காண்டம்
(03) பிராமண இயல், சாதன இயல், இலக்கண இயல், பயன் இயல்
(04) சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்

17) மெய்கண்ட சாஸ்திர நூல்களுள் முதன்மையானதாக விளங்குவது.
(01) சிவஞானபோதம் (02) சிவஞான சித்தியார் (03) திருவருட்பயன் (04) சிவப்பிரகாசம்

18) சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி?
(01) கரணம் (02) யோகம் (03) திதி (04) நட்சத்திரம்

19) பூர்வக்கிரியைகளில் அடங்காதது.
(01) அன்னபிராசனம் (02) மாசியம் (03) திருமணம் (04) ஏடுதொடக்கல்

20) ஒருவர் இறந்து முப்பதாம் நாள் செய்யும் கிரியை.
(01) அந்தியெட்டி (02) சிரார்த்தம் (03) மகாளயம் (04) ஆண்டுத்திவசம்

21) செபம் செய்யும் உருத்திராக்கமாலை கொண்டிருக்கவேண்டிய உருத்திராக்க மணிகளின் எண்ணிக்கை.
(01) 54 (02) 52 (03) 100 (04) 28

22) சைவ வித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
(01) 1822 (02) 1888 (03) 1923 (04) 1928

23) குனிந்த புருவமும் எனும் பதிகத்தில் போற்றப்படும் இறை மூர்த்தம்.
(01) தட்சணாமூர்த்தம் (02) அர்த்தநாரீஸ்வரர் (03) இலிங்கோற்பவர் (04) நடராஜர்

24) ஆடையற்ற கோலத்தில் திகாம்பரமாக காட்சியளிப்பவர்.
(01) மதுரை வீரன் (02) வைரவர் (03) தம்பிரான் (04) முனியப்பர்

25) பிரமபுரத்துக்கு வழங்கப்படும் பெயர் அல்லாதது.
(01) திருத்தோணிபுரம் (02) திருக்கழுமலம் (03) தில்லை (04) சீர்காழி

26) நீர் முகப்பிள்ளையார் கோயில் என வழங்கப்படும் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்.
(01) யாழ்ப்பாணம் (02) மட்டக்களப்பு (03) கிளிநொச்சி (04) புத்தளம்

27) ஐப்பசி மாத அமாவாசையை அடுத்து பிரதமை முதல் அனுட்டிக்கும் விரதம்.
(01) கந்தசஸ்ஷி (02) விநாயகர்சஸ்டி (03) வரலட்சுமி (04) திருவம்பாவை

28) சைவ சித்தாந்தம் சொருபநிலையிலுள்ள இறைவனுக்கு வழங்கும் பெயர்.
(01) பரமசிவம் (02) பரமசிவன் (03) நிர்விகாரி (04) சச்சிதானந்தன்

29) "புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீர் உண்டு" என எடுத்தியம்பியவர்.
(01) திருநாவுக்கரசர் (02) சேக்கிழார் (03) பாரதியார் (04) திருமூலர்

30) இலிங்க வழிபாட்டால் முத்தியடைந்தவர்.
(01) அப்பூதியடிகள் (02) சிறுதொண்டர் (03) சாக்கியநாயனார் (04) திருநீலகண்டர்

31) அருணந்தி சிவாச்சாரியாரின் குருபூசைத்தினம்.
(01) ஐப்பசி சுவாதி (02) ஆனி மகம் (03) ஆவணி உத்தரம் (04) புரட்டாதி பூரம்

32) வாக்கின் வேந்தர் என போற்றப்படும் நாயனார்.
(01) சம்பந்தர் (02) திருநாவுக்கரசர் (03) சுந்தரர் (04) மாணிக்கவாசகர்

33) மகோற்சவத்தில் இரதோற்சவம் ,ஐந்தொழில்களின் குறித்து நிற்பது.
(01) படைத்தல் (02) காத்தல் (03) அழித்தல் (04) அருளல்

34) திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தம் அடங்கும் திருமுறை.
(01) 09 (02) 10 (03) 11 (04) 12

35) களுதாவளை பிள்ளையார் ஆலய தலவிருட்சம்.
(01) வன்னிமரம் (02) மாமரம் (03) மருதமரம் (04) வில்வமரம்

36) "இரந்து வாழும் நிலையைவிட இல்லை என்று கைவிரிப்பது மிகவும் தாழ்வானது" என கூறும் நூல்.
(01) திருமந்திரம் (02) அகநானூறு (03) திருவருட்பயன் (04) புறநானூறு

37) மார்கழித் திருவாதிரை உற்சவம் இந்தியாவில் சிறப்பாக நடைபெறும் தலம்.
(01) சிதம்பரம் (02) சீர்காழி (03) திருவண்ணாமலை (04) திருவாரூர்

❖ **பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடைகளை தெரிக.**

| | | |
|---|---|---|
| A. ஐப்பசி சுவாதி | D. மயில்வாகனம் | G. மட்டக்களப்பு |
| B. யோகியர் | E. தமிழாகமம் | H. சிவஞானபோதம் |
| C. இராமகிருஸ்ண விஜயம் | F. அச்சுதகளப்பாளர் | I. சித்தர் |

38) திருமூலருடன் தொடர்புடைய தொகுதி.
(01) BEI (02) BDI (03) CEG (04) BEG

39) மெய்கண்ட தேவருடன் தொடர்புடைய தொகுதி.
(01) AFI (02) BFI (03) BFH (04) AFH

40) முத்தமிழ் வித்தகருடன் தொடர்புடைய தொகுதி
(01) CEG (02) CDG (03) AEI (04) CFG

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் இரண்டாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) பின்வருவனவற்றுக்கு விடை தருக.
(01) தியானத்தின் இரு வகைகளும் எவை?
(02) பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களும் எவை?
(03) உயிரிகளின் ஈடேற்றம் கருதி இறைவன் அருளியவை எவை?
(04) புறத்தே அணியும் சைவ சாதனங்கள் எவை?

(05) திருமணநாளுக்கு முன்னர் இடபெறும் நிகழ்வுகள் எவை?
(06) விநாயக சஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
(07) திருநாவுக்கரசர் கைலைக்காட்சியை கண்ட தலம் எது?
(08) நித்திய அன்னதானம் வழங்கப்படும் ஆலயங்கள் 2 தருக?
(09) பிரத்தியட்சம் என்றால் என்ன?
(10) வைரவருக்குரிய விரத நாட்கள் 2 எழுதுக? (10 x 2 = 20 புள்ளிகள்)

02) பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி பொழிப்புரையையும் எழுதுக.
(01) பால் நினைந்தூட்டும் ……………….
(02) குனிந்த புருவமும் …………………..
(03) யாவர்க்குமாம் ……………………….
(04) உம்பர் தரு ………………………….
(05) பச்சைமாமலை போல் ……………... (2 x 5 = 10 புள்ளிகள்)

03) ''வேதமும் ஆகமும் சைவசமயத்தின் முதல் நூல்களாம்''
(01) வேதத்தின் மறுபெயர்கள் 2 தருக?
(02) ஆகமம் இறைவனால் அருளப்பட்டதை கூறும் பாடலடிகள் மூன்று தருக?
(03) ஆகமத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை எழுதுக? (2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) ''மனித வாழ்வில் விழுமியங்களை கடைப்பிடித்து உயர்வடைவோம்''
(01) வாய்மைக்கு வள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
(02) ஈகை-ஒப்பரவு இரண்டையும் வேறுபடுத்தி காட்டுக?
(03) ஒப்புரவாளனை திருவள்ளுவர் ஊருணி,பயன் மரம் மருந்துமரம் என புகழ்ந்துரைப்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக? (2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) ''அரந்தை தீர்க்கும் அடியவர் மேளிமேல்
நிரந்த நீற்றொளியால் நிறை தூய்மையால்
பரந்த அஞ்செழுத்து ஓசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது''
(01) இப் பாடல் இடம்பெற்றுள்ள நூலையும் ஆசிரியர் பெயரையும் தருக?
(02) தேவாசிரியன் மண்டபம் மேலுள்ள பாடலில் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
(03) சிவனடியார்களின் சிறப்புக்கள் பற்றி விபரிக்குக? (2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு''
(01) தேர்த்திருவிழாவை தேரோட்டம் என நிறப்பிக்கும் ஆலயம் எது?
(02) நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை சூழ நான்கு திசைகளிலும் உள்ள நான்கு ஆலயங்களையும் எழுதுக?
(03) நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் தோன்றிய வரலாற்றுக் கதையை சுருக்கமாக விபரிக்க? (2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
(01) காலக்களிப்பு
(02) திருமணச் சடங்கு
(03) சைவ சாதனங்கள்
(04) தெய்வ சிந்தனை (2 x 5 = 10 புள்ளிகள்)